# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## EXTERNAL DEGREE

## PART II EXAMINATION IN BBA / BCOM 2000 / 2001 (JUNE / JULY 2007) - (Repeat)

## BBA/COM 302 HUMAN RESOURCE MANAGEMENT

வினா 1 உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க நேரம்: 03 மணித்தியாலம்

(1) விடய ஆய்வு: ஜக்நெல்சனின் பிரச்சனை

உள்ளூர் வங்கியில் இயக்குனர்களின் சபையில் புதிய அங்கத்தவராக ஜக்நெல்சன் என்பவர் தலைமை அலுவலகத்தில் வைத்து அறிமுகப்படுத்தப்பட்டார்.

அவர் ரூத் ஜோன்சனுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட போது அவளுடைய வேலை பற்றி தெரிந்து கொள்ள ஆர்வமாக இருந்ததுடன் தற்போது அவள் பயன்படுத்தும் இயந்திரத்தைப் பற்றியும் அவளிடம் கேட்டார்.

அதற்கு ரூத் ஜோன்சன், அவளுக்கு உண்மையில் அவ்வியந்திரத்தை எவ்வாறு அழைப்பதென்றும், அது என்ன செய்யும் என்றும் கூடத் தெரியாது எனக் கூறினார். தான் ஒருவர் மட்டுமே இரண்டு மாத காலமாக அங்கே வேலை செய்வதாகவும் அவள் விளக்கினாள். அவ் இயந்திரத்தை இயக்குவது மட்டும்தான் அவளால் செய்ய முடிந்தது. மேற்பார்வையாளர்களின் கருத்துப்படி அவள் ஒரு சிறந்த தொழிலாழியாக இருந்தாள்.

கிளை அலுவலகம் ஒன்றின் பொறுப்பாளியாக உள்ள மேற்பார்வையாளர் ஒருவர் ஏதோ ஒரு விடயம் பிழையாக உள்ளதாகவும், ஆனால் அது என்ன என அவளுக்குத் தெரியாது எனவும் நெல்சனிடம் இரகசியமாகக் கூறினார். ஆனால் தொழிலாளர் விலகல் விகிதம் மிகவும் அதிகமாக இருப்பதாகவும் அவர்கள் விலகும் போது அவர்களுக்குப் பதிலாக வேறு ஒரு ஊழியரை அவ் வேலையில் விரைவாக அமர்த்தமுடியாமல் இருப்பதாகவும் அவள் விளக்கினாள். வாடிக்கையாளர்களை சந்திப்பதையும் கடன் வழங்குவதையும் அவள் தொடர்ச்சியாக மேற்கொண்டதனால் புதிதாக வரும், வெளிச்செல்லும் ஊழியர்களுடன் சிறிதளவு நேரமே அவள் வேலை செய்ய வேண்டியுள்ளது.

அனைத்து கிளை மேற்பார்வையாளர்களும் தலைமை அலுவலகம் அல்லது ஏனைய கிளைகளுடன் எதுவித தொடர்புகளையும் மேற்கொள்ளாமல் தமது ஊழியர்களை வேலைக்கமர்த்திக் கொள்கின்றனர். தமது கிளைகள் விருத்தி அடையும்போது மேற்பார்வையாளர்கள் அமைதியாக இருந்த தொழிலாலர்களின் இடத்திற்கு புதியவர்களை நியமிப்பதற்காக பொருத்தமான ஊழியர்களை கண்டுபிடிக்க முயற்சித்தார்கள்.

22 கிளைகளையும் பார்வையிட்ட பின்னர் ஒரே மாதிரியான பிரச்சினைகள் பல அவரால் அடையாளம் காணப்பட்டது. அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தலைமை அலுவலகத்தால் என்ன செய்ய முடியும் அல்லது என்ன நடவடிக்கைகள் அவரால் எடுக்க முடியும் என நெல்சன் ஆச்சரியமடைந்தார். வங்கி நிறுவனங்களை பொதுவாக நோக்குவோமெனில், அவை நல்ல முறையில் தொழிற்படுகின்ற அமைப்புக்களாகும். இவை கடந்த 8 வருட காலப்பகுதியில் 27 தொடக்கம் 191 வரையான ஊழிய அதிகரிப்பைக் கொண்டுள்ளன. மேலும் நெல்சன் குறித்த விடயம் பற்றி சிந்தித்தான். அது அவனை மேலும் குழப்ப நிலைக்கு இட்டுச் சென்றது. அவனால் அப் பிரச்சினைகள் தொடர்பாக தலையிடாமல் இருக்க முடியவில்லை. அத்துடன் தான் அறிந்தவற்றை ஆளுனருக்கு எவ்வாறு அறிக்கையிடுவதென அவனுக்குத் தெரியவில்லை.

**வினாக்கள்:**

a) வங்கியின் தலைமை அலுவலகத்திலும் கிளைகளிலும் காணப்படுகின்ற சில பிரச்சினைகளுக்கு காரணம் யாது என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

(08 புள்ளிகள்)

b) பிரதான அலுவலகத்தில் மனித வளப்பிரிவு ஒன்றினது கட்டமைப்பு உதவிபுரியும் என நீர் நினைக்கின்றீரா. விளக்குக?

(10 புள்ளிகள்)

c) இப்பிரச்சினைக்கு உங்களால் முன்வைக்கப்படும் மாற்றுத் தீர்மானங்கள் யாவை? அதனை எவ்வாறு அமுல்படுத்துவீர் விளக்குக?

(10 புள்ளிகள்)

(மொத்தம் 28 புள்ளிகள்)

(2) **(a)** மனிதவளத் திட்டமிடலின் பிரதான நோக்கங்கள் யாவை. விளக்குக?

(06 புள்ளிகள்)

**(b)** மனிதவளத் திட்டமிடல் செய்முறையின் படிமுறைகளை நிரற்படுத்துக?

(06 புள்ளிகள்)

**(c)** மனிதவளத் திட்டமிடலின் வரையறைகள் யாவை?

(06 புள்ளிகள்)

(3) **(a)** ஓர் பயிற்சித்திட்டத்தை வடிவமைக்கும் போது பின்பற்றக்கூடிய படிமுறைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

(06 புள்ளிகள்)

**(b)** பின்வருவனவற்றை வேறுபடுத்துக.

1. பயிற்சி, அபிவிருத்தி
2. தொழிலில் பயிற்சி, தொழிலுக்கு வெளியில் பயிற்சி
3. தொழில் விபரணம், ஊழியர் விபரணம்
4. செயற்றிறன் மதிப்பீடு, செயற்றிறன் முகாமைத்துவம்

(12 புள்ளிகள்)

(4) **(a)** செயற்றிறன் மதிப்பீடு மனிதவள முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது விபரிக்குக?

(06 புள்ளிகள்)

**(b)** செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியர்கள், நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் யாவை?

(06 புள்ளிகள்)

**(c)** செயற்றிறன் மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையானது எம் முறைகளில் நடாத்தப்படும்?

(06 புள்ளிகள்)

(5) **(a)** தொழிலாளர்களுக்கும் முகாமைக்கும் இடையிலான சிறந்த உறவானது கம்பனியின் உயர்ந்த உற்பத்திக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யும். ஆராய்க?

(06 புள்ளிகள்)

**(b)** தொழிற்பிணக்குகளின் வகைகளைச் சுருக்கமாக விளக்குக?

(06 புள்ளிகள்)

**(c)** மனக்கிளர்ச்சியினை எவ்வாறு ஒரு நிறுவனத்தில் அடையாளம் காணலாம்?

(06 புள்ளிகள்)

(6) (a) ஒரு நிறுவனத்தில் சிறந்த சம்பளத் திட்டத்தை எவ்வாறு தயாரிப்பீர்?.

(06 புள்ளிகள்

(b) கொடுப்பனவு மட்டத்தை நிர்ணயிக்கும் பொதுவான காரணிகள் எவை?

(06 புள்ளிகள்

(c) ஒரு நிறுவனத்தில் எழுத்து மூலமாக உருவாக்கப்படும் ஆளண கொள்கைகளினால் ஏற்படும் நன்மைகள் எவை.?

(06 புள்ளிகள்

(7) (a) மாஸ்லோவின் தேவைப்படிமுறைக் கோட்பாட்டுக்கும் ஹேக்ஸ்பேக்கின் இருகாரண கோட்பாட்டுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?

(08 புள்ளிகள்

(b) தொடர்பாடலில் ஊடகத்தை தெரிவு செய்யும் போது கருத்திற் கொள்ள வேண்டி காரணிகள் யாது?

(04 புள்ளிகள்

(c) தொடர்பாடலை மேற்கொள்ளும் போது எதிர்கொள்ளும் தடைகளையும் அவற்றை நீக்கும் வழிமுறைகளையும் விபரிக்குக?

(06 புள்ளிகள்

(8) (a) தொழில் வடிவமைப்பு நுட்பங்கள் யாவை? விளக்குக?

(06 புள்ளிகள்)

(b) தொழில் பகுப்பாய்வு எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது?

(06 புள்ளிகள்)

(c) தொழில் மதிப்பீட்டின் பிரதான நோக்கங்கள் யாது?

(06 புள்ளிகள்)